செ.வெ.எண்: 336 நாள்: 16.06.2021

**கும்பகோணம் அரசு மருத்துவமனையில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வார்டுகளையும் அதில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் சிகிச்சை முறை குறித்து மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டறிந்து ஆய்வு செய்தார். மாண்புமிகு அரசு தலைமை கொறடா முனைவர். கோவி செழியன் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மை செயலாளர் மருத்துவர் ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் இன்று (16.5.2021) அய்வு மேற்கொண்டார்.

பின்னர் கொரோனா 3-ம் அலையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து கும்பகோணம் மருத்துவமனையில் 18 கோடி ரூபாய் மதிப்பில் சுகாதாரத்துறை மூலம் புதிதாக **கட்டப்பட்டுள்ள** கட்டடத்தை ஆய்வு செய்தார்.

**மருத்துவமனை ஆய்வு செய்து பின் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசியதாவது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, அனைத்து மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நேற்று தஞ்சாவூரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இன்று காலை கும்பகோணம் சுற்றுப்புற பகுதிகளில் ஏராளமானோர் முககவசம் அணியாமல் சுற்றி வருவதாக சுகாதாரத்துறை செயலாளர் தெரிவித்தார். அது மிகவும் வருத்தம் அளிக்க கூடிய செய்தியாகும். எனவே முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி அனைவரும் கண்டிப்பாக முககவசம் அணிந்து வெளியே வரவேண்டும், கிருமிநாசினிகள் தெளித்து கைகளை சுத்தமாக கழுவ வேண்டும், தேவையில்லாமல் வெளியே சுற்றுவதைத் தவிர்க்க வேண்டும் அப்போதுதான் இந்த தொற்றை முழுமையாக கட்டுப்படுத்த முடியும்.

தமிழகத்தில் தடுப்பூசி செலுத்திக்கொள்ள மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். அதிகாலை 5 மணியில் இருந்தே தடுப்பூசி செலுத்துவதற்கான டோக்கன் வாங்க காத்திருக்கின்றனர். பெரியளவில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால், தடுப்பூசி வர வர மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

கும்பகோணம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் கொரோனா மட்டுமல்லாமல் பொது மருத்துவத்திற்கும் என 400 படுக்கை வசதிகள் கொண்ட சிறப்பு சிகிச்சை மையம் மற்ற மருத்துவமனைகளுக்கு முன்மாதிரியாக செய்துள்ளனர். தற்போது சுகாதாரத்துறை மூலம் புதிதாக 18 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இன்னும் 2 கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் கொண்டுவரப்பட்டு அப்பணி நிறைவுற்ற பிறகு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

தமிழகத்தில் மருத்துவர்கள் பற்றாக்குறை, செவிலியர்கள் பற்றாக்குறை மற்றும் மருத்துவம் சார்ந்த ஊழியர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வந்தது. இதையடுத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று தமிழகத்தில் 2 ஆயிரம் மருத்துவர்கள், 6 ஆயிரம் மருத்துவர்கள், 3,700 மருத்துவம் சாரா களப்பணியாளர்கள் நியமிக்கும் பணி தமிழக அரசு சார்பில் நேரடியாக நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்கனவே 20 மருத்துவர்களை நியமித்துள்ளார். 60 க்கும் மேற்பட்ட செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் 3 மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர். இன்னும் இந்த மருத்துவமனைக்கு எத்தனை மருத்துவர்கள் தேவையோ அவர்களை நியமித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கும்பகோணம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும் என கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க. அன்பழகன் மனு அளித்துள்ளார். கொரோனா தொற்று குறைந்தவுடன் அந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கூறினார்.

ஆய்வின் போது கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன்,இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை மரு. செல்வவிநாயகம், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) டாக்டர். சுகபுத்ரா.என்.ஒ. இ.ஆ.ப., கும்பகோணம் நகராட்சி ஆணையர் திருமதி. லட்சுமி, ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**